கவனிக்க .- *13.12.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1842 - 2013 දෙසැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2013.12.20

1842 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
பதவிகள் - வெற்றிடம்	3412	வரவு செலவுக் கூற்றுகள்	-
பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்	-	வரவு செலவு திரட்டுகள்	3435
உள்ளூராட்சி அறிவித்தல்கள்	3422	ஆதன விற்பனைகள்	-
துணைவிதிகள்	-	ஆயவிற்பனையும் குத்தகையும்	-
உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்		வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள்	-
கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்	-	நானாவித அறிவித்தல்கள்	3435

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, சனவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, சட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, சட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

பீ. எச். எல். வீ. டீ சில்வா,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பதவிகள் — வெற்றிடம்

மத்துகம பிரதேச சபை

பதவி - வெற்றிடங்கள்

மேல் மாகாண அரச சேவை வெற்றிடங்களுக்காக இணைத்துக்கொள்ளல்

மத்துகம பிரதேச சபையில் வெற்றிடங்களாக உள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு இணைத்துக்கொள்வதற்காக மேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மத்துகம பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.

	பதவிப் பெயர்	வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை	சம்பள முறை	கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்
01	அலுவலக வேலை உதவியாளர்	01	PL.1-(2006 A) ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (ரூபா 13,840 க்கு முன்னர் வினைத் திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும்.) இந்த சம்பள அளவுத்திட்டத்தில் 12 ஆவது படிமுறை (ரூபா 13,060) ஆரம்ப சம்பள அளவாக எடுக்கப்படுதல் வேண்டும்.)	கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
02	வேலை களத்தொழிலாளர்	20	PL.1-(2006 A) ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் நான்காவது சம்பள படிமுறைக்கு (ரூபா 12,090) வருவதற்கு முன்னர் சித்தி பெறுதல் வேண்டும்.	குறைந்தபட்சம் 8 ஆம் தரம்/ 9 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல்.

02. மத்துகம பிரதேச சபையில் ஏற்கனவே அமைய, பதிலீடு அல்லது செயற்றிட்ட அடிப்படையில் சேவை புரியும் நபர்களின் விண்ணப்பங்கள் தொடர்பாக அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

03. **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை உரித்தாகாது.)

04. **ஏனைய தகைமைகள்** :

(1) விண்ணப்பதாரி பரம்பரை அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) சிறந்த நன்னடத்தையுடையவராகவும், சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 3 வருடங்களுக்கு குறையாத காலம் விண்ணப்பதாரி மேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும். (வாக்காளர் பெயர்பட்டியல் மூலம் அல்லது கிராம சேவை உத்தியோகத்தர்/பிரதேச செயலாளர் மூலம் வழங்கப்படும் சான்றிதழினால் வதிவிடத்தை நிரூபிக்க வேண்டும்) ;

(4) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிறுவனத்தினால் சேவையில் இருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வூதியம் பெற்றவராக இருத்தல் கூடாது ;

(5) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட ஒருவராய் இருத்தலாகாது ;

(6) தேவைப்படுமானால் சபையினால் விதிக்கப்படுகின்ற பிணை ஒன்றை பணத்தினால் அல்லது காப்புறுதிச் சான்றிதழ் ஒன்றினால் வைப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

05. **பொது நிபந்தனைகள்** :

(i) சிறந்த ஆளுமைபடைத்தவராக இருத்தல் வேண்டும் ;
(ii) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும் ;
(iii) மூன்று வருட நன்னடத்தைக் காலத்துக்கு உட்படும் ;
(iv) நன்னடத்தை காலத்தின் இறுதியில் நிரந்தரமாக்குவதற்காக கவனத்தில் கொள்ளப்படும் ;
(v) இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் தங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வித் தகைமைகள் அல்லது வேறு தகைமைகள் போலியானது அல்லது உண்மையற்றது என உறுதிசெய்யப்பட்டால் வேறு எந்தவித அறிவித்தலும் இன்றி நியமனம் இரத்து செய்யப்படும்.

6. **மேற்குறித்த பதவிகளுக்கு இணைத்துக்கொள்ளும் முறை** :

6.1. கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கேற்ப சகல விண்ணப்பதாரிகளையும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி வெற்றிடங்களுக்கமைய அதிகூடிய தகைமைகளுடைய நபர்களை இணைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.

6.2 களத் தொழிலாளர் பதவியினுள் வீதித் தொழிலாளர், நூலகத் தொழிலாளர், மின் தொழிலாளர், சாரதி உதவியாளர், மோட்டார்கிரேடர் இயந்திர செயற்பாட்டு உதவியாளர், தெரு விளக்கு ஏற்றுபவர் போன்ற பதவிகளும் உள்ளடங்குவதனால் வேறு தொழில்சார் தகைமைகளை நிரூபிக்கின்றவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.

7. **விண்ணப்பங்கள்**.- விண்ணப்பதாரிகள் இந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், 2014.01.03 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், பிரதேச சபை, மத்துகம" எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடிதயுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். தாமதமாக கிடைக்கும் மற்றும் தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்புகூறப்படமாட்டாது.

8. தகைமைகள் உடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

9. விண்ணப்பத்துடன் கீழ்க் காணும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் என்பதுடன் நேர்முகப் பரீட்சையின்போது மூலப்பிரதிகளை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவிடம் தொடர்பாக பிரதேச செயலாளரின் சான்றிதழ்/வாக்காளர் பெயர்பட்டியலின் பிரதி ;
(4) அண்மையில் பெறப்பட்ட நற்குணம் பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (இதில் ஒன்று கிராம சேவை உத்தியோகத்தரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும்.)
(உ) தொழில்சார் அனுபவங்கள் பற்றிய சான்றிதழ்.

9. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் வேளையில் இந்த ஆட்சேரத்தலை தாமதப்படுத்தல் அல்லது மாற்றியமைத்தல் மற்றும் இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் போன்ற சகல அதிகாரங்களும் மத்துகம பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

10. இணைத்துக்கொள்ளும் திகதிக்கு ஏற்பட்டுள்ள சகல வெற்றிடங்களும், நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதால் மேற்குறித்த பதவிகளின் எண்ணிக்கை மாற்றம் பெறுவதற்கு இடமுண்டு.

அசோக்க ரணசிங்க,
செயலாளர்,
மத்துகம பிரதேச சபை.

பிரதேச சபை,
மத்துகம,
2013, நவெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

மத்துகம பிரதேச சபை

..... பதவி

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துடன்) :----.

   முதலெழுத்தினால் குறிப்பிடப்படும் பெயர் :----.

2. தபால் விலாசம் :----.

3. பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அன்று வயது :-

   வருடங்கள் :----, மாதங்கள் : ----, நாட்கள் :----.

5. திருமணமானவர் /திருமணமாகாதவர் :----.

6. இனம் :----.

7. நீங்கள் இலங்கையரா? ஆம் என்றால் பரம்பரை மூலமா? பதிவின் மூலமா? என்பது பற்றி :----.

8. கல்வித் தகைமைகள் :----.

9. தொழில்சார் தகைமைகள் :----.

10. நீங்கள் ஏற்கனவே இந்த பிரதேச சபையில் சேவை புரிகின்றவர் என்றால் :----.

    (i) தற்பொழுது வகிக்கும் பதவி :----.

    (ii) அந்தப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

    (iii) அந்த நியமனத்தின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையிலா?) :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என இத்தால் உறுதிமொழிகிறேன். இதில் அடங்கும் தகவல்கள் ஏதேனும் உண்மையற்றது அல்லது பிழையானது எனவும் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் நான் தகுதியற்றவராவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எந்தவித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திததி :----.

12-695

களுத்துறை பிரதேச சபை

களுத்துறை பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள பிரதேச சபை பிரதேசத்திலுள்ள நிரந்தர வதிவிடதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர் இல.	பதவி	வெற்றிடங்களின் எண்ணிக்கை	கல்வி தகைமைகள்		ஏனைய தகைமைகள்	சம்பள அளவுத்திட்டம்	ஆட்சேர்ப்பு
			உள்ளக	வெளியக			
01	சாரதி II B	04	ஆகக்குறைந்தது 2 சிறப்புத் தேர்ச்சிகளுடன் 6 பாடங்களில் க.பொ.த. சாதாரண தரத்தினை சித்தியெய் தியிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் ஆகக் குறைந்தது	ஆகக்குறைந்தது 2 சிறப்புத் தேர்ச்சிகளுடன் 6 பாடங்களில் க.பொ.த. சாதாரண தரத்தினை சித்தியெய் தியிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் ஆகக் குறைந்தது	* 24hwt இனை விடக் குறைந்த பாரவண்டி களை மற்றும் தனியார்/ வாடகை வாகனங்களைச் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட திறமைச் சான்றிதழினைப் பெற் றிருத்தல் வேண்டும்.	P.L. 3 2006 A ரூபா 12,470-10×130-10×145-10× 160-12×170- ரூபா 18,860 4 ஆவது சம்பளப் படியினை அடையும் முன் வினைத்திறன் காண் தடை.	கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் ஊடாக மற்றும் திறமையினை மதிப் பிடுவதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்று.

தொடர் இல.	பதவி	வெற்றிடங்களின் எண்ணிக்கை	கல்வி தகைமைகள்		ஏனைய தகைமைகள்	சம்பள அளவுத்திட்டம்	ஆட்சேர்ப்பு
			உள்ளக	வெளியக			
			5 பாடங்களை சித்தியெய்திருத்தல் வேண்டும்.)	5 பாடங்களை சித்தியெய் திருத்தல் வேண்டும்.)	* சாரதி ஒருவராக 3 வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். (சான்றிதழ்களின் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும்) * உயரம் ஆகக் குறைந்தது 5அடியாக இருத்தல் வேண்டும். * பகல் மற்றும் இரவில் சேவையாற்று வதற்கான தேக ஆரோக்கியத்தினைக் கொண்டிருப்பதுடன் சிறந்த பார்வையினையும் கொண்டிருத்தல் வேண்டும். * நெடுஞ்சாலை சட்டகோவை தொடர்பில் சிறந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.		
02	அலுவலகப் பணியாளர் சேவை II	01	ஒரே தடவையில் ஆகக்குறைந்தது ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.	ஒரே தடவையில் ஆகக்குறைந்தது ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.		P.L. 1 2006 A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 7 ஆவது சம்பளப் படியினை அடையும் முன் வினைத்திறன் காண் தடை (ரூபா 13,840)	குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைப்பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகள் நேர் முகப் பரீட்சைக்கு உட் படுத்தப்படுவார்கள்.
03	நூலக உதவி யாளர் II	01	ஒரே தடவையில் ஆகக்குறைந்தது ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.	ஒரே தடவையில் ஆகக்குறைந்தது ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.		P.L. 1 2006 A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 7 ஆவது சம்பளப் படியினை அடையும் முன் வினைத்திறன் காண் தடை (ரூபா 13,840)	குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைப்பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகள் நேர் முகப் பரீட்சைக்கு உட் படுத்தப்படுவார்கள்.
04	காவலாளி	01	ஒரே தடவையில் ஆகக்குறைந்தது ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.	ஒரே தடவையில் ஆகக்குறைந்தது ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.		P.L. 1 2006 A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 7 ஆவது சம்பளப் படியினை அடையும் முன் வினைத்திறன் காண் தடை (ரூபா 13,840)	குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைப்பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகள் நேர் முகப் பரீட்சைக்கு உட் படுத்தப்படுவார்கள்.
05	வேலை/ களத் தொழிலாளி	02	ஆகக்குறைந்தது தரம் 5-ஆண்டு 6 இனைச் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.	ஆகக்குறைந்தது தரம் 5-ஆண்டு 6 இனைச் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.		P.L. 1 2006 A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 4 ஆவது சம்பளப் படியினை அடையும் முன் வினைத்திறன் காண் தடை.	குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைப்பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகள் நேர் முகப் பரீட்சைக்கு உட் படுத்தப்படுவார்கள்.

02. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுவான நிபந்தனைகள்** :

(i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பத்தின் முடிவுத்திகதியின்போது 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது;

(iii) மேல் மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருட காலம் நிரந்தர வதிவிடதாரியாக இருத்தல் வேண்டும்;

(iv) களுத்துறை பிரதேச சபை நிருவாகப் பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்;

(v) சிறந்த தேக ஆரோக்கியமும் சிறந்த நடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்;

(vi) குற்றவியல் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல் கூடாது;

(vii) அரச அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது;

(viii) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன்கீழ் ஓய்வுபெற்றிருத்தல் கூடாது;

(ix) களுத்துறை பிரதேச சபையில் அமைய, பதிலீட்டு அல்லது ஒப்பந்த (வேலைக் கூறுகள்) அடிப்படையில் ஏற்கனவே சேவையாற்றி வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்;

(x) அலுவலகப் பணியாளர் மற்றும் நூலக உதவியாளர் பதவிகளைக் கருத்திற்கொள்ளும் போது நிரந்தர சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்;

(xi) விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இப்பதவிகளுக்குரிய புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் திருத்தங்களை மேற்கொள்ளல், அல்லது பதிலீடுசெய்தல், ஆட்சேர்ப்பைத் தாமதித்தல் அல்லது மாற்றம் செய்தல் மற்றும் இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் அல்லது திருத்துதல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் களுத்துறைப் பிரதேச சபைச் செயலாளருக்கே உரித்தாகும்.

03. **சேவை நிபந்தனைகளும் நியதிகளும்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வுதிய உரித்துடையதுமாகும். இப்பதவிக்கு நியமனம் பெற்றோர் 3 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர். நிரந்தர பதவியை வகிப்போர் ஒரு வருடகால தகுதிகூர் நிலையில் வைக்கப்படுவர்.

(ii) விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வுதிய நிதியத்திற்கு பங்களித்தல் வேண்டும்;

(iii) அரசகரும மொழி கொள்கைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்;

(iv) ஆட்சேர்ப்பதற்கான இந்நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை / அரச நிதிப் பிரமாணங்கள்/ அரச திணைக்களக் கட்டளைகள் மற்றும் மேல் மாகாண சபை அல்லது களுத்துறை பிரதேச சபையினால் காலத்துக்குக்காலம் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் என்பவற்றுக்கு இணங்குவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

4. தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக அழைக்கப்படுவார்கள் என்பதுடன் பின்வரும் ஆவணங்களின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்:-

(i) பிறப்புச் சான்றிதழ்;

(ii) கல்விச் சான்றிதழ்;

(iii) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி;

(iv) பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ்;

(v) அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள் (அவற்றில் ஒன்று கிராம சேவையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.)

(vi) அனுபவம் தொடர்பான சான்றிதழ்.

(vii) வேறு தகைமைச் சான்றிதழ்கள்;

05. **விண்ணப்பிக்கும் விதம்**.-இவ் அறிவித்தலிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இணங்க இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி 12"×8" அங்குல அளவான தாள் ஒன்றில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் 2013.01.03 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வஸ்கடுவ, காலி வீதி, களுத்துறை பிரதேச சபை, செயலாளரிற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

கீதானி டி. லொகுவெல்ல,
செயலாளர்,
களுத்துறை பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

களுத்துறை பிரதேச சபை

..... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (i) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.
2. நிரந்தர முகவரி :-----.
3. பிறந்த திகதி:-----.
4. பால்:-----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | |
6. தொலைபேசி இலக்கம் :-----.
7. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :-----.
8. கல்வித் தகைமைகள் :-----.

   8.1 விண்ணப்பதாரி கடைசியாக சித்தியடைந்த தரம் :-----.

   8.2 க.பொ. த. (சா.த.) பரீட்சை :

   (i) ஆண்டு :----- மாதம் :-----.

   (ii) சுட்டெண் :-----.

   (iii) பெறுபேறு:

பாடம்	சித்தி	பாடம்	சித்தி
1		6	
2		7	
3		8	
4		9	
5		10	

   8.3 க.பொ. த. (உ.த.) பரீட்சை:

   (i) ஆண்டு :----- மாதம் :-----.

   (ii) சுட்டிலக்கம் :-----.

   (iii) பெறுபேறு:

பாடம்	சித்தி

9. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் :-----.
10. ஏனைய தகைமைகள் :-----.
11. ஏதேனும் குற்றம் ஒன்றிற்காக நீர் எப்போதாவது நீதிமன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :-----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானது என்று உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு அமைய இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரமானது தவறானது என்றும் பிழையானது என்றும் கண்டறியப்பட்டால் நியமனத்திற்கு முன்னராயின் தகைமையிழக்கப்படுவதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

வலல்லாவிட பிரதேச சபை

பதவி - வெற்றிடம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1834 மற்றும் 2013, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிமை வெளியிடப்பட்ட IV (ஆ) அரச நிர்வாக பிரிவில் வெளியான சாரதிப் பதவிக்கான கல்வித் தகைமையை பின்வருமாறு திருத்தம் செய்வதோடு விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும் திகதியிலும் திருத்தம் செய்கின்றேன்.

பின்வரும் பதவிக்கான விண்ணப்பப்படிவம் 2013, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள 2013, ஒற்றோபர் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தை அனுப்பிய விண்ணப்பதாரிகள் கீழ்காணும் கல்வித் தகைமையை பூர்த்தி செய்து இருப்பின் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்பதனை அறிவிக்கின்றேன்.

தொடர் எண்	பதவிப் பெயர்	பதவி எண்ணிக்கை	கல்வித்தகைமையும் ஆட்சேர்ப்பு முறையும்
01	சாரதி II ஆ வகுப்பு	02	(இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாதவாறு க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் 2 திறமை சித்திகள் உட்பட 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் (ஒரே அமர்வில் குறைந்தது ஐந்து பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

ஈ. ஏ. சாந்திலதா,
செயலாளர்,
வலல்லாவிட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வலல்லாவிட,
2013, திசெம்பர் 5.

12-969

பண்டாரகமை பிரதேச சபை

மேல் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

மேல் மாகாணம், பண்டாரகமை பிரதேச சபையில் கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமைகளைக்கொண்டுள்ள, வெற்றிடங்களாயுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும்பொருட்டு விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து 27.12.2012 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், பண்டாரகமை பிரதேச சபை, பண்டாரகமை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். பண்டாரகமை பிரதேச சபை அதிகார சபைக்குள் வசிப்பவர்கள் மற்றும் அப்பிரதேச சபையில் தற்போது அமய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர் இல.	பதவிப் பெயர்	சம்பள அளவுத்திட்டம்	பதவிகளின் எண்ணிக்கை	கல்வி ஏனைய தகைமைகள்
01	வேலை கள நிருவாகத்தர் தரம் II	எம்என் 1- 2006ஏ ரூபா 13,120-10x145-11x170-10x240-ரூபா 22,040 (ஆரம்ப நிலை)	01	க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் சிங்களம்/ தமிழ் மற்றும் கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண் கணிதம்/தேகாரோக்கியமும் மற்றும் உடலியல் விஞ்ஞானம் /சுகாதார விஞ்ஞானம்/விஞ்ஞானம் உட்பட 05 பாடங்களில் திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; அல்லது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண் கணிதம்/தேகாரோக்கியமும் மற்றும் உடலியல் விஞ்ஞானம்/ சுகாதார விஞ்ஞானம்/ விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்று உள்ளூராட்சி நிறுவனத்தில் சேவையாற்றுபவர் ; அல்லது

தொடர் இல.	பதவிப் பெயர்	சம்பள அளவுத்திட்டம்	பதவிகளின் எண்ணிக்கை	கல்வி ஏனைய தகைமைகள்
				உள்ளூராட்சி நிறுவனமொன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத தொடர் நிரந்தர சேவையை பூர்த்தி செய்திருப்பின் 08 ஆம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
02	சாரதிகள் II ஆ	பீஎல் 2- 2006ஏ ரூபா 12,470-10x130-10x145-10x160-12x170- ரூபா 18,860 (ஆரம்ப நிலை)	01	எட்டாம் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பிரத்தியேக வாகனம் மற்றும் நிகர நிறை 24 அந்தரிற்கு குறைந்த பார மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். சாரதியாக ஆகக்குறைந்தது 3 வருட அனுபவமிருத்தல் வேண்டும். (சான்றிதழ்மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்) குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும். இரவு மற்றும் பகல் காலங்களில் சேவையாற்றக்கூடிய நல்ல உடல் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டியதுடன் நல்ல கண்பார்வை உடையவராக இருத்தலும் வேண்டும். பெருவீதிகள் சம்பந்தமான சட்டகோவைப் பற்றி நல்ல அறிவித்தல் வேண்டும்.
03	அலுவலக அலுவல் உதவியாளர் தரம் III	பீஎல் 1- 2006ஏ ரூபா 11,730-10x120-10x130-10x145-12x160- ரூபா 17,600 (ஆரம்ப நிலை)	01	ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/ஆண்டு 9 இல் சித்தி அடைந் திருத்தல் வேண்டும்.
04	காவலாளி தரம் II	பீஎல் 1- 2006ஏ ரூபா 11,730 -10x120-10x130-10x145-12x160- ரூபா 17,600 (12 ஆம் படி நிலை)	01	க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்
05	வேலை/கள ஊழியர் தரம் III	பீஎல் 1- 2006ஏ ரூபா 11,730-10x120 -10x130-10x145-12x160- ரூபா 17,600 (ஆரம்ப நிலை)	07	ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/ஆண்டு 9 இல் சித்தி அடைந் திருத்தல் வேண்டும்.
06	சுகாதாரத் தொழிலாளி தரம் III	பீஎல் 1- 2006ஏ ரூபா 11,730-10x120 -10x130-10x145-12x160- ரூபா 17,600 (ஆரம்ப நிலை)	01	கல்வி தகைமைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

மேலே தரப்பட்ட அவ்வவ் பகுதிகளுக்குரிய தகைமைகளுக்கு மேலதிமாக கீழே தரப்பட்டுள்ள பொது தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:-

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு முன்னர் 03 வருட காலப்பகுதியில் மேல் மாகாண நிரந்தர வதிவாளர் என நிரூபித்தல் வேண்டும். (பண்டாரகமை பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் நிரந்தர வதிவாளர்களிற்கு விசேட கவனம் செலுத்தப்படும்.) வாக்குரிமை பதிவேட்டின்மூலம் அல்லது பிரதேச செயலாளர் சான்றுபடுத்துகின்ற கிராம அலுவலரின் சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியான 27.12.2013 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.(ஏலவே அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ளோரிற்கு மேற்குறிப்பிடப்பட்ட வயதெல்லை ஏற்படைத்தாகாது.)

(iii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) குற்றச் சட்ட கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டிக்கப்பட்டவராக இருக்கக்கூடாது.

(v) விண்ணப்பதாரிகள் பரம்பரையாவோ பதிவின்மூலமோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(vi) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு முன்னர் 05 வருட காலப்பகுதிக்குள் குற்றத்திற்காக (எச்சரிக்கை தவிர்ந்த) தண்டனை பெறாதவராகவும் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

(vii) அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்கள் விண்ணப்பிக்கும்போது, அரச சேவையிலிருந்து அல்லது மாகாண அரச சேவையிலிருந்து அல்லது அரச சட்டத்தின்கீழான சபைகள்/கூட்டுத்தாபனங்கள் சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

2. **சேவை நியதிகள்**:

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்;

(ii) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்கள் மூன்று வருட தகுதிகூர் காண் நிலைக்கு உட்படுவர்./ தரமுயர்த்தப்படுமாயின் ஒரு வருட பதிற் கடமையாற்றும் காலவெல்லைக்கு உட்படுவர்;

(iii) மேற்கூறப்பட்ட பதவிகளின்கீழ் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவோர் விதவைகள்/தபுதாரர், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

(iv) இவ்வூழியர்கள் இடமாற்றத்திற்கு உட்படுவர். உள்ளூராட்சி நிறுவனங்களுக்குள் இடமாற்றும் தத்துவம் அவ்வவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாக தலைவருக்கே உரியதாகும். மேலும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையில் இடமாற்றம் செய்தல் அவ்வவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களின் சம்மதத்தின்மீது உள்ளூராட்சி ஆணையாளரினால் நடைபெறும். கடமை நேரங்கள் மற்றும் கடமையில் ஈடுபடுதல் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவன தலைவருக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களுக்கமைய தீர்மானம் எடுக்க முடியும்.

(v) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாய சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும் தாபனக் கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கும் அரச அல்லது மாகாண சபை அல்லது திணைக்கள கட்டளைகளுக்கும் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் அனுகூலமாக செயற்படுவதற்கும் நியமனம் பெற்றோர் கட்டுப்பட்டவராவார்.

3. **ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதம்**:

(i) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதிகளுக்கமைய எழுத்துமூல/கட்டமைக்கப்பட்ட பரீட்சை பெபேறுகளின்மீது அல்லது செயன்முறை பரீட்சையின் திறமைகள்மீது தகைமைகள் பெறுவோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர்.

(ii) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதிகளுக்கமைய எழுத்துமூல/கட்டமைக்கப்பட்ட பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சை அல்லாது பதவிகளுக்காக நேர்முகப்பரீட்சையின் மூலம் புள்ளிகள் மற்றும் தகைமைகள்மீது தேர்ந்தெடுக்கப்படுவர்.

4. **விண்ணப்பிக்கும் விதம்**:

(i) விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்:-

(1) பிறப்புச் சான்றிதழ்;

(2) தேசிய அடையாள அட்டை;

(3) ஆரம்ப கல்வித் தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்கள்;

(4) தொழில்சார் அல்லது அனுபவங்களை நிரூபிக்கும் ஆவணங்கள்;

(5) தங்கள் வதிவை நிரூபிக்கும் பொருட்டு அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;

(ii) ஆரம்ப தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் ;

(iii) விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றஞ்செய்தல் அல்லது ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நியமித்திருந்த பதவி எண்ணிக்கைகளை திருத்துதல்/தீர்மானித்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் பண்டாரகமை பிரதேச செயலாளருக்கே உரித்தானதாகும்;

(iv) சுகாதார நிருவாக பதவிகளுக்காக பொ. நி. சு. இல. 15/90 இன் பிரகாரம் எழுத்துமூல பரீட்சை பெறுபேறுக்கமைய முன்னுரிமைபெற்ற விண்ணப்பதாரர்களே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்படுவர் ;

வேலைக்கள பதவிக்கான எழுத்துமூல பரீட்சை :

(அ) பொது புலமை பரீட்சை 1 ½ மணித்தியால வினாத்தாள்

(ஆ) பொது அறிவு பரீட்சை 01 மணித்தியால வினாத்தாள்

(v) சாரதி பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறையில் தகைமைகளை பெற்ற விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டு அவர்கள் செயன்முறை பரீட்சையில் தோற்றி அதில் சித்தியடைதல் அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 24/95 இன் மூலம் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தலிற்கமைய கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையினால் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். திணைக்களத்தின் பிரதிநிதியொருவர், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வண்டி பரீட்சிப்பவர் பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அலுவலரொருவர் அடங்கிய சபையினால் நடாத்தப்படும் சாரதி பயிற்சி நிபுணத்துவத்தை மதிப்பிடும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(v) விண்ணப்பப்படிவம் இட்டு அனுப்பும் கடித உறையின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை வர்த்தமானி அறிவித்தலில் குறித்துள்ளதுபோல் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் 04 ஆம் பந்தியின் I இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vi) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவன தலைவரின் சிபார்சுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். நியமித்த திகதியான 27.12.2013 இற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

என். டி. ஐ. சுவர்ணா கே. பெரேரா,
செயலாளர்,
பண்டாரகமை பிரதேச சபை.

பண்டாரகமை பிரதேச சபை,
பாணந்துறை வீதி,
பண்டாரகமை,
15.02.2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பண்டாரகமை பிரதேச சபை

..... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
3. நிரந்தர விலாசம் :----.
4. தேசிய அடையாள அட்டை :----.
5. பிறந்த திகதி : ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. விண்ணப்ப முடிவுத் திகதியான 13.03.2013 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
7. பால் (ஆண்/பெண்) :----.
8. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.
9. தேசிய இனம் :----.
10. பண்டாரகமை பிரதேச சபையில் தற்போது சேவையாற்றுகின்றீராயின்-
    வகிக்கும் பதவி :----, சேவைக் காலம் :----, அப்பதவி நிரந்தர/தற்காலிக/அமய/ ஒப்பந்தம் ஆகியன :----.
11. நீர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பரம்பரைமூலமாகவா? பதிவின்மூலமாகவா? :----.
12. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :----.
13. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என ஊறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பாராயின்,
திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ..... தற்போது இத்திணைகளத்தில்/நிறுவனத்தில் (நிரந்தர/அமய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் ..... திகதி முதல் ..... திகதி வரை ..... ஆக சேவையாற்றுகிறார். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு நியமிக்கப்படுவராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வித்த்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன்.

-----,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரை இடவும்)
திகதி :----.

12-972

உள்ளூராட்சி அறிவித்தல்கள்

அம்பலங்கொடை நகர சபை

1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்கு பெயரிடுதல் நினைவுத் தூபிகள் நிர்மாணித்தல் மற்றும் நிருவகித்தல் சட்டத்தின்கீழ் வீதிகளுக்குப் பெயரிடுதல் "அ. ம. கருணாரத்ன மாவத்தை"

2013.12.03 ஆந் திகதி நடைபெற்ற நகர சபைக்கூட்டத்தில் 5 : 2 : 1 ஆம் இலக்க சபை உடன்பாட்டின்படி வீதிக்கான பெயரிடுதல் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 55 (அ) பிரிவின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்குப் பெயரிடுதல், நினைவுத் தூபி நிர்மாணித்தல் மற்றும் நிர்வகித்தல் சட்டத்தின் கீழான விதிமுறைகளின்படி தென்மாகாண சபை முதலமைச்சரால் வழங்கப்பட்டுள்ள அனுமதியின் பிரகாரம் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி "அ. ம. கருணாரத்ன மாவத்தை" என பெயரிடப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

(சட்டத்தரணி) எம். டபிள்யு. அருனபிரதீப்,
தலைவர்,
அம்பலாங்கொடை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
அம்பலாங்கொடை,
2013, நவெம்பர் 22.

அட்டவணை

01. உள்ளூராட்சி மன்றத்தின் பெயர்	:	அம்பலாங்கொடை நகர சபை
02. மாவட்டம்	:	காலி
03. கிராம அலுவலர் பிரிவு	:	பொறம்பை
04. வீதியின் தற்போதைய பெயர்	:	இல்லை
05. புதிதாக இடப்பட்ட பெயர்	:	"அ. ம. கருணாரத்ன மாவத்தை"
06. வீதி விபரம்	:	பொல்வத்தை வீதியிலிருந்து (அம்பலாங்கொடையிலிருந்து திலக்கபுற ஊடாக பட்டபொலை பிரதான வீதியிலிருந்து தனியா சர்வதேச நிறுவகம் வரையிலான போருக் ஓடையின் கிழக்குப் பக்கத்திற்குச் சமமாக அமைந்துள்ள வீதி

12-655

பூஜாபிட்டி பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) அ உப பிரிவின் கீழான அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) அ உப பிரிவின்படி மத்திய மாகாணத்தின் பூஜாபிட்டி பிரதேச சபையினால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை பூஜாபிட்டி பிரதேச சபைக்குச் சொந்தமானதென வெளிப் படுத்தப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகக் குறித்த பாதைக்குரிய காணிகளின் சொந்தக்காரர்களென உரிமை பாராட்டுவோர் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் தங்களது உரித்துரிமையைக் காட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால எல்லைக்குள் இந்த அறிவித்தலுக்கமைய ஏதும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாதவிடத்து, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை பூஜாபிட்டி பிரதேச சபைக்குச் சொந்தமானதென ஏற்றுக்கொண்டு பராமரிக்கப்படும் என்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு வெளிப்படுத்துகின்றேன்.

அனுர குமார மடலுஸ்ஸ,
தலைவர்,
பூஜாபிட்டி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பூஜாபிட்டி,
2013.

பாதையின் பெயர்	:	பட்கொல்லாதெனிய ஹல்கொல்ல பாதையிலிருந்துள்ள இடைப்பாதை
கிராம அலுவலர் பிரிவு	:	பட்டகொல்லாதெனிய
பாதையின் ஆரம்பம்	:	கல்ஹின்ன ஹல்கொல்ல பிரதான வீதி
பாதையின் முடிவு	:	திரு. எம். எச். எம். சித்தீக் என்பவரது காணியின் முடிவில்

அட்டவணை

இடதுபுறம்	வலதுபுறம்	பாதையின் அகலம் (அடி)	பாதையின் நீளம் (அடி)
திரு. எம்.எச்.எம். சித்தீக் என்பவருக்குச் சொந்தமான காணி	1. கல்ஹின்ன ஹல்கொல்ல பாதை 2. திரு. ஜமால்தீன் என்பவருக்குச் சொந்தமான காணி	5	100

12-656

பதுளை மாநகர சபை

1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகள் பெயரிடல், ஞாபக சின்னங்கள் நிர்மானித்தல் மற்றும் நிர்வகித்தல் பற்றிய சட்டம்

வீதிகள் பெயரிடல்

பதுளை மாநகர சபையின் 2013.09.26 ஆந் திகதிய சபைத் தீர்மானத்துக்கிணங்க வீதிகளின் பெயர்கள் மாற்றப்படுவது தொடர்பாகக் கீழ்க்காணும்படித் தீர்மானிக்கப்பட்டது.

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ், சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகள் பெயரிடல், ஞாபக சின்னங்கள் நிர்மானித்தல் மற்றும் நிர்வகித்தல் பற்றிய சட்டத்திலுள்ள கட்டளைகளின் படி ஊவா மாகாண சபை முதலமைச்சர் அவர்களினால் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளபடி வீதிகள் பெயரிடப்பட்டுள்ளன என்பதை இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

ஞானா ரத்னாயக்க,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,

மாநகர சபை அலுவலகம்,
பதுளை.

அட்டவணை

உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் : பதுளை மாநகர சபை
மாவட்டம் : பதுளை

தொடர் இல.	*வீதியின் முன்னர் இருந்த பெயர்*	*புதிதாக இடப்பட்டுள்ள பெயர்*
	ஹிந்தகொட நீர்தாங்கி வீதியில்	
01	*முதலாம் ஒழுங்கை*	*தெஹெமி மாவத்தை*
02	*இரண்டாம் ஒழுங்கை*	*சமாதி மாவத்தை*
03	*மூன்றாம் ஒழுங்கை*	*சமகி மாவத்தை*
04	*நான்காம் ஒழுங்கை*	*K. S. M. விக்கிரமரத்ன மாவத்தை*
05	*ஐந்தாம் ஒழுங்கை*	*சர்வோதய மாவத்தை*
06	*ஆறாம் ஒழுங்கை*	*மிஹிந்து மாவத்தை*
07	*ஏழாம் ஒழுங்கை ஹிந்தகொட நீர்த்தாங்கியின்*	*ரத்ன மாவத்தை*

12-699

பதுளை மாநகர சபை

1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகள் பெயரிடல், ஞாபக சின்னங்கள் நிர்மாணித்தல் மற்றும் நிர்வகித்தல் பற்றிய சட்டம்

வீதிகள் பெயரிடல்

பதுளை மாநகர சபையின் 2012.01.26 ஆந் திகதிய (அட்டவணையில் தொடர் இலக்கம் 01, 02, 03, 04, 05) மற்றும் 2013.03.28 ஆந் திகதிய (அட்டவணையில் தொடர் இலக்கம் 06, 07, 08) சபைத் தீர்மானங்களுக்கிணங்க வீதிகளின் பெயர்கள் மாற்றப்படுவது தொடர்பாகக் கீழ்க் காணும்படித் தீர்மானிக்கப்பட்டது.

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 71 (1) பிரிவின் கீழ், சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகள் பெயரிடல், ஞாபக சின்னங்கள் நிர்மாணித்தல் மற்றும் நிர்வகித்தல் பற்றிய சட்டத்திலுள்ள கட்டளைகளின் படி ஊவா மாகாண சபை முதலமைச்சர் அவர்களினால் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளபடி வீதிகள் பெயரிடப்பட்டுள்ளன என்பதை இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

ஞானா ரத்னாயக்க,
மாநகர ஆணையாளர்,
பதுளை மாநகர சபை.

மாநகர சபை,
பதுளை.

அட்டவணை

உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : பதுளை மாநகர சபை
மாவட்டம் : பதுளை

தொடர் இல.	*வீதியின் முன்னர் இருந்த பெயர்*	*புதிதாக இடப்பட்டுள்ள பெயர்*
01	*முதியங்கனை வட்டரவும் பாதை*	*சம்புத்த ஜயந்தி மாவத்தை*
02	*கோப்பி வத்தை பாதை*	*டியுடர் விஜேசேகர டி சில்வா மாவத்தை*
03	*துனுகார கும்புர மாவத்தை*	*மாசல் எதிரிசூரிய மாவத்தை*
04	*மயிலகஸ்தென்ன கிளைப் பாதை*	*விஜேதாஸ சொய்சா மாவத்தை*
05	*அந்தெனிய கெதரவத்த பாதை*	*ஜய மாவத்தை*
06	*மஹியங்கன பாதை ரத்வத்த வலவ்வ அருகில் வைத்திய நில நிவஸ வரை செல்லும் பாதை*	*சமரக்கோன் உத்தியான மாவத்தை*
07	*வித்தியால குறுகிய பாதை*	*கவிபதி கொஸ்கம பலவர்தன மாவத்தை*
08	*ஆயுர்வேதைக்கு முன்னாலான பாதை*	*J. C. T. கொதலாவல மாவத்தை*

12-700

மட்டக்களப்பு மாநகர சபை

சோலை வரி - 2014

(255 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 230, 247 இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் படி மட்டக்களப்பு மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து ஆதனங்கள் மீதும் கீழ்க்காணும் விபரங்களுக்கமைய எவ்வித மாற்றமுமின்றி நேர்முந்திய ஆண்டில் அமுலில் இருந்த வீதங்களின் படி சோலைவரியை விதித்து அறவிடுவதென மட்டக்களப்பு மாநகர சபை தீர்மானித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

1. (அ) வட்டாரங்கள் 1 தொடக்கம் 14 வரை புதிய ஆண்டுப் பெறுமதியில் 14% ;
(ஆ) வட்டாரங்கள் 15 தொடக்கம் 19 வரை புதிய ஆண்டுப் பெறுமதியில் 12%
(இ) மட்டக்களப்பு மாநகரசபையுடன் இணைக்கப்பட்டுள்ள முன்னைய சின்ன ஊறணி வலையிறவு கிராமசைபப் பிரதேசம் - ஆண்டுப் பெறுமதியில் 10%.

முறையே மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் அன்றோ அதற்கு முன்னரோ நான்கு காலாண்டுத் தவணைகளில் சம தொகைகளாக செலுத்தப்படல் வேண்டும்.

2. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 230 (2) இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட கழிவுகள் அனுமதிக்கப்படும்.

(அ) 2014.01.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வரிகள் முழுமையாகச் செலுத்தப்படும் பட்சத்தில் 10% கழிவு

(ஆ) காலாண்டிற்குரிய வருடாந்த வரிகள் ஒவ்வொரு காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தப்பட்டால் 5% கழிவு.

மேலே குறிப்பிட்ட திகதிகளுக்குப் பின்னர் செலுத்தப்படும் சகல கட்டணங்கள் மீதும் வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிட வளவுகள் மீதும் 15% எனவும் ஏனைய வளவுகள் தொடர்பில் 20% எனவும் விறாந்துக் கட்டணங்கள் அறவிடப்படும்.

க. சிவநாதன்,
மாநகர ஆணையாளர்,
மட்டக்களப்பு மாநகர சபை.

மாநகர சபை,
மட்டக்களப்பு.

12-813

அம்பலங்கொடை நகர சபை

வருமான வரி - 2014

2013.11.05 ஆந் திகதியும் 5 : 2 : 1 ஆம் இலக்கமும் கொண்ட தீர்மானத்தின்படி 2014.01.01 ஆந் திகதி முதல் கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

(255 ஆவது அத்தியாயமாகிய) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 160 (3) ஆம் பிரிவின்கீழ் ஒவ்வொன்றும் வரையறுக்கப்படல்.

ஒப்பந்தங்களும் வரி நீக்கங்களுக்கும் கீழ் 2013 ஆம் ஆண்டிற்கான அம்பலங்கொடை நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து விற்பனை வியாபார நடவடிக்கைகளுக்குமாக பயன்படுத்தப்படும் நிலையங்களில் வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்கு பன்னிரெண்டு (12 %) வரியும் அந்நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 160 (1) ஆவது பிரிவின் பிரகாரம் ஏனைய அனைத்தும் நிலையான சொத்துக்களுக்கு வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்கு எட்டு (8.%) வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் அத்தீர்வை முறையே 2014, மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அதற்கு முன்னரோ சமமாகப் பிரித்து அல்லது பூரணமாக செலுத்தப்படலாம் என இத்தால் அறியத்தருகிறேன்.

2. 1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கமுடைய மாநகர சபை (திருத்தச்) சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட வருடாந்த வரித்தொகை கீழே காட்டப்பட்டுள்ள படி செலுத்தப்படும் போது அதில் காட்டப்பட்டுள்ள கழிவுத் தொகை குறைக்கப்படுமென அறியத்தருகிறேன்.

(அ) 2014, சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் முழு வருடத்திற்கும் செலுத்தவேண்டிய வருமான வரித்தொகை செலுத்தப்பட்டால் அத்தொகையில் நூற்றுக்குப் பத்து வீதம் (10%) ;

(ஆ) அத்தொகை தவணை முறையில் செலுத்தப்படுமாயின் குறித்த தவணையின் முதலாவது மாதத்திற்குள் செலுத்தப்பட்ட தொகையில் நூற்றுக்கு ஐந்து வீதம் (5%).

மேற்கூறப்பட்டவாறு குறித்த திகதிகளில் செலுத்தவேண்டிய தொகை செலுத்தாதவர்களிடம் அனைத்து வணிக வியாபார சொத்துக்களில் நின்றும் நூற்றுக்கு இருபது (20%) மும் ஏனைய சொத்துக்களால் பதினைந்து (15%) முன் தண்டனைக் கட்டணமாக அறவிடப்படும் என அறியத்தருகிறேன்.

எம். டப்ளியு. அருண பிரதீப், (சட்டத்தரணி)
தலைவர்,
அம்பலங்கொடை நகர சபை.

அம்பலங்கொடை நகர சபை அலுவலகம்,
அம்பலங்கொடை,
2013, நவெம்பர் 28.

12-814

பாத்ததும்பர பிரதேச சபை

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆம் அத்தியாயம்)

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (2) ஆம் பிரிவின்படி பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மாடு அறுக்குமிடம் மற்றும் ஆடு அறுக்குமிடம் என்பவற்றை 2014 ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் நடத்திச் செல்ல அனுமதிப்பத்திரம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர். பாத்ததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதியும் எவரேனும் இதற்கான எதிர்ப்பைக் காட்ட விரும்பினால், அதன் காரணத்தைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் இணைப் பிரதிகளில் இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV (ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட 14 நாட்களுக்குள் அதனைப் பதிவுத் தபாலில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

டப்ளியு. எம். எஸ். பி. வெலகெதர,
தலைவர்,
பாத்ததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாத்ததும்பர,
2013, திசெம்பர் 2.

அட்டவணை

விண்ணப்பதாரியின் பெயர்	தன்மை	மாடு அறுக்குமிடம் மற்றும் ஆடு அறுக்குமிடத்தின் முகவரி
1. திரு. ஐ. எம். யெஹிசான் 15/6, கண்டி வீதி, மடவளை பஸார்.	மாடு அறுக்குமிடம்	11/6, கண்டி வீதி, மடவளை
2. திரு. கே. எம். தையுப் 31/4, நுகதெனிய, குண்ணேபான.	மாடு அறுக்குமிடம்	31/4, ஊராதெனிய, குண்ணேபான
3. திரு. ஐ. எம். யெஹிசான் 15/6, கண்டி வீதி, மடவளை பஸார்.	மாடு அறுக்குமிடம்	6/15, கண்டி வீதி, மடவளை

12-867/1

பாத்த தும்பர பிரதேச சபை

மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனைக் கடைகளை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் - 2014

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (2) ஆம் பிரிவின்படி பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களை நடத்துவதற்கு 2014 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பாத்ததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதியும் எவரேனும் இதற்கான எதிர்ப்பைக் காட்ட விரும்பினால், அதன் காரணத்தைக் குறிப்பிட்டு இணைப் பிரதிகளில் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 (பதினான்கு) நாட்களுக்குள் அதனைப் பதிவுத் தபாலில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கால எல்லைக்குள் இவ் அறிவித்தல் பற்றிய எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படவில்லையெனின், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளோருக்கு குறித்த வர்த்தக நிலையங்களில் உரிய வர்த்தகத்தைச் செய்துகொண்டு செல்ல 2014.01.01 முதல் 2014.12.31 வரை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமென பொதுமக்கள் தெரிவித்துக்கொள்வதற்காக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டப்ளியூ. எம். எஸ். பி. வெலகெதர,
தலைவர்,
பாத்ததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாத்ததும்பர,
2013, திசெம்பர் 2.

அட்டவணை

விண்ணப்பதாரியின் பெயர்	வர்த்தகம் செய்யும் இடம்	வர்த்தகத்தின் தன்மை
1. திரு. எஸ். ஜீ. ஹுசேன்	437, தொரகமுவ வீதி, கலதெனிய சந்தி, தலவின்ன	மாட்டிறைச்சிக்கடை
2. திரு. கே. எம். தையுப்	40/ஏ, ஊராதெனிய குண்ணேபான	மாட்டிறைச்சிக்கடை
3. திரு. எஸ். எம். ராசிக்	342, தொரகமுவ வீதி, உடதலவின்ன	மாட்டிறைச்சிக்கடை
4. திரு. எஸ். எம். இல்லியாஸ்	357, தொரகமுவ வீதி, உடதலவின்ன	மாட்டிறைச்சிக்கடை
5. திரு. ஏ. ஏ. எம். மசாஹிம்	7/B/1, பொல்கொல்ல	மாட்டிறைச்சிக்கடை
6. திரு. ஐ. எம். யெஹியான்	13/சீ, கட்டுகஸ்தொட்ட வீதி, மடவளை	ஆட்டிறைச்சிக்கடை

12-867/2

மஹரகம நகர சபை

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப் பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

03. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

காந்தி கொடிகார,
தலைவர்,
மஹரகம நகரசபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம,
2013, திசெம்பர் 4.

அட்டவணை

பாதையின் பெயர்	பரப்பளவு	நீளம்	அகலம்	தொடக்கம்	முடிவு
கொட்டாவை கிழக்கு ஹொரஹேன வீதி இலக்கம் : 1571/3N, 1571/3K, 157/1/24B, 1571/3F, 1571/86/2, 1571/3F1, 1571/5A, 1571/B/3, 1571/1/1/B1/3, 1571/3H, 1571/3D, 1571/3 G, 1571/3E, 1571/3M, 1571/3 P, ஆகிய வீடுகள் அமைந்த அமைந்துள்ள வழி.	பீ. எச். பீ. நிஹால் சில்வா நில அளவையாளரால் 1998.07.22 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 524 ஆம் இலக்கமுடைய நில அளைவத் திட்டத்துக்கு அமைய	100m	6m	தெற்கு வீதி ஹொரஹேன	71/12
பன்னிபிட்டிய, ருக்மலே மகளிர் விடுதி வீதியில் போதியின் முன்னால் உள்ள இலக்கம் : 213/41, 213/27, 213/32, 213/43, 213/34, 213/46, 213/38, 213/39, 213/36 ஆகிய வீடுகள் அமைந்துள்ள கிளை வழி.	மர்வின் சமரநாயக்க நில அளவையாளரால் 2001.10.10 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 7923 ஆம் இலக்கமுடைய நில அளைவத் திட்டத்துக்கு அமைய	111.0m 37.0m	6.0m 4.5m	மகளிர் விடுதி வீதி ருக்மலை	45/10
பன்னிபிட்டிய, வீர மாவத்தை மில்லகாவத்தை வீதி, (புத்தர் சிலையின் அருகில் தெற்கில் உள்ள) இலக்கம் : 74/21 சி, 315/2, 53/1, 326/1, 326, 64/1பீ, 316/1, 64/1, 315/3 ஆகிய வீடுகள் அமைந்துள்ள வழி.	எச். ஏ. னீ. பிரேமரத்ன நில அளவையாளரால் 2013.10.10 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 6572 ஆம் இலக்கமுடைய நில அளைவத் திட்டத்துக்கு அமைய	510 அடி	15 அடி	64	21/சீ/74

12-857

எல்ல பிரதேச சபை

அங்கீகாரம் பெற்ற துணைச்சட்டங்கள்

(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகாரம் பெற்ற துணைச்சட்டங்கள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தன் படி (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி எல்ல பிரதேச சபையினால் 2013.08.14 ஆந் திகதியன்று நடைபெற்ற சபை ஒன்றுகூடலின்போது கீழ்வரும் அட்டவணையில் கோரப்பட்டுள்ள இல. 17 குறித்தான ஆலோசனையானது அங்கீகரிக்கப்பட்டமையினை இத்தால் அறியத்தருகின்றோம்.

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (பாவனையில் உள்ள விதிமுறைகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியோடு சேர்த்து வசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகாரம் பெற்ற துணைச்சட்டங்கள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (IV) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி ஊவா மாகாண உள்ளூராட்சி

நிறுவன விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் 2013.06.28 ஆந் திகதிய 1816/43 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பிரதேச சபை அங்கீகாரம் பெற்ற துணைச்சட்ட இவ் ஆலோசனை வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்வதற்கு மேற்கூறிய உள்ளூராட்சி நிறுவன (அங்கீகாரம் பெற்ற துணைச்சட்டங்கள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் 1 ஆவது உப பிரிவின் கீழ் எல்ல பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

எச். எம். சுனில் காமினி,
தலைவர்,
எல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
எல்ல,
2013, ஒற்றோபர் 13.

12-892

வத்தளை - மாபோளை நகர சபை

அனுமதிப்பத்திரக் கட்டண விதிப்பு - 2014

1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 164 ஆம் பிரிவு மற்றும் அத்துடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 162 ஆம் பிரிவின் கீழ் வத்தளை-மாபோளை நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் கீழ்வரும் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. எச். எம். நௌசாத்,
தலைவர்,
வத்தளை - மாபோளை நகர சபை.

வத்தளை - மாபோளை நகர சபை,
வத்தளை,
2013, நவெம்பர் 4.

தீர்மானம்

1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபை கட்டளைச் சட்டத்தின் 164 (2) ஆம் பிரிவின் கீழ், வத்தளை-மாபோளை நகரசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, (1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அபிவிருத்திச் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக), அந்த சட்டத்தின் 164 (2) ஆம் பிரிவின்படி, இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹோட்டல்கள், உணவு விடுதிகள், தங்குமிட விடுதிகளுக்கு, அவற்றின் முன்னைய வருடத்தின் பெறுகைகளின் 1% வீதத்தை அனுமதிப்பத்திர கட்டணமாக விதித்து அறவிடப்படல் வேண்டும் என தீர்மானிக்கின்றது.

12-786

தும்பனே பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் விடுவிக்கப்படுகின்ற அறிவித்தல்

மத்திய மாகாண, கண்டி மாவட்டத்தில் தும்பனே பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் இப்பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளாகப் பகிரங்கப்படுத்தப்படவேண்டுமென 2013.09.30 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்ட பிரேரணைகளுக்கேற்ப இவ்வீதிகள் இப்பிரதேச சபைக்குரிய வீதிகளாக பகிரங்கப்படுத்தப்படுகிறது.

எல். எஸ். பீ. கிரிகாகம,
தலைவர்,
தும்பனே பிரதேச சபை,
கலகெதர.

தும்பனை பிரதேச சபை அலுவலகம்,
கலகெதர,
2013, மார்கழி 11.

தும்பனே பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் விடுவிக்கப்படுகின்ற அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் தும்பனே பிரதேச சபையினால் கீழ் தரப்பட்டள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் தும்பனே பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வீதி தொடர்பாக உரிய காணியின் உரிமையாளர்கள் எதிர்ப்புகள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 24 (2) பிரிவின் பிரகாரம் செயற்படுமாறு வேண்டப்படுகிறார்கள்.

எல். எஸ். பீ. கிரிகாகம,
தலைவர்,
தும்பனே பிரதேச சபை,
கலகெதர.

தும்பனை பிரதேச சபை அலுவலகம்,
கலகெதர,
2013, மார்கழி 11.

அட்டவணை

இல.	பாதையின் பெயர்	நீளம்	அகலம்
01	அலகல்ல பொத்தபிடிய பாதையில் கணக்கபொல கிராம அலுவலர் பிரிவின் அவுல்போதலே கிராமத்தில் திரு. ஜே. எம். ரன்பண்டாவுடைய காணியிலிருந்து தொடங்கி தொடம்பிடிய ஊடாக சூரியகொட காணி வரையான பாதை	410 மீற்றர்	9அடி

வலது பக்க காணிகளின் உரிமையாளர்கள் :

1. ஜே. எம். ரன்பண்டா
2. ஜே. மகிந்த பண்டா

இடது பக்க காணிகளின் உரிமையாளர்கள் :

1. ஓ. ஆர். ஹீன்பண்டா
2. ஆர். பீ. எஸ். ராஜகுரு
3. டபிள்யூ. ஜீ. சமரஜீவ
4. எஸ். எம். ஜயதிலக
5. எஸ். எம். சுமித் குமார
6. எஸ். எம். பிரதீப் குமார

12-788/1

தும்பனே பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் விடுவிக்கப்படுகின்ற அறிவித்தல்

மத்திய மாகாண, கண்டி மாவட்டத்தில் தும்பனே பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் இப்பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளாகப் பகிரங்கப்படுத்தப்படவேண்டுமென 2013.10.30 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்ட பிரேரணைகளுக்கேற்ப இவ்வீதிகள் இப்பிரதேச சபைக்குரிய வீதிகளாக பகிரங்கப்படுத்தப்படுகிறது.

எல். எஸ். பீ. கிரிகாகம,
தலைவர்,
தும்பனே பிரதேச சபை.

தும்பனை பிரதேச சபை அலுவலகம்,
கலகெதர,
2013, மார்கழி 11.

தும்பனே பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் விடுவிக்கப்படுகின்ற அறிவித்தல்

1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் தும்பனே பிரதேச சபையினால் கீழ் தரப்பட்டள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் தும்பனே பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வீதி தொடர்பாக உரிய காணியின் உரிமையாளர்கள் எதிர்ப்புகள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தங்களது உரிமையை உறுதிப் படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 24 (2) பிரிவின் பிரகாரம் செயற்படுமாறு வேண்டப்படுகிறார்கள்.

எல். எஸ். பீ. கிரிகாகம,
தலைவர்,
தும்பனே பிரதேச சபை,
கலகெதர.

தும்பனை பிரதேச சபை அலுவலகம்,
கலகெதர,
2013, மார்கழி 11.

அட்டவணை

இல.	பாதையின் பெயர்	நீளம்	அகலம்
01	கலதொல ஹலகொடுவ பாதை	158 மீற்றர்	10 அடி

வலது பக்க காணிகளின் உரிமையாளர்கள் :

1. எச். எம். முதுபண்டா
2. எச். எம். டிங்கிரிமெணிகே
3. எச். எம். லீலாவதி
4. எச். எம். டிகிரிமெணிகே உரித்துடைய கமவெல கும்புர காணி
